முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 207/2017

வாதி தரப்பு சாட்சி -1 காளியம்மாள் **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 20.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனது என உரிமை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மற்றும் ஒரு துரைசாமி ஆகியோர் எனது தம்பிகள். எனது கணவர் 07.03.1977 ம் தேதி சர்வே எண்.134/1ல் 6 ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் தற்போது சப்டிவிஷன் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. 01.06.2000 ம் தேதி சர்வே எண். 134/1 ல் ஏக்கர் 1.82 செண்ட் நிலத்தை 2 ம் பிரதிவாதிக்கு நானும், எனது கணவர் மற்றும் மற்ற வாதிகளும் சேர்ந்து பதிவு செய்த கிரைய ஆவணம் மூலம் விற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

2. மேற்படி தேதியிலிருந்து 2 ம் பிரதிவாதி தான் ஏக்கர் 1.82 செண்ட் நிலத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது. 2 ம் பிரதிவாதி பெயரில் அவர் கிரையம் வாங்கிய சொத்திற்கு தனியாக பட்டா வந்துவிட்டது என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதிக்கும் எனக்கும் சுமூகமான உறவு உண்டா என்றால் எங்கள் நிலத்தில் பிரச்சனை செய்தால் எவ்வாறு சுமூகமான உறவு இருக்கும். எத்தனை வருடங்களாக சுமூகமான உறவு எங்களுக்குள் இல்லை என்றால் 40 வருடங்களாக நாங்கள் நிலம் வாங்கியலிருந்து பிரச்சனை தான். 2 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஏக்கர் 1.82 செண்ட் நிலத்தை எனது அனுபவத்தில் இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கும் 2 ம் பிரதிவாதிக்கும் சுமூகமான உறவு இல்லை என பொய்யாக கூறுகிறேன் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சில மாதங்களுக்கு முன்பிலிருந்து தான் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-3 பட்டா எண்.233 2 ம் பிரதிவாதி பெயரில்

கூட்டாக உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா-ஆ.8 வில்லங்க சான்று 1977 முதல் 1986 வரை தான் உள்ளது என்றால் சரிதான். 1986 க்கு பிறகு வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை உள்ள வில்லங்க சான்றிதழ் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1986 க்கு பிறகு உள்ள வில்லங்க சான்றை தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் காரணம் எதுவும் இல்லை. எனது கணவர் வாங்கிய 6 ஏக்கரில் ஏக்கர் 1.82 செண்ட் நிலத்தை குறிப்பிட்ட நான்கெல்லைக்குள் நானும், மற்ற வாதிகளும், எனது கணவருடன் சேர்ந்து உரிய மறுபயனை பெற்றுக்கொண்டு 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

4. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி தான் சொத்தின் அனுபவத்திலிருந்து அவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு அவரிடமிருந்து துர்லாபம் அடைய பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த நிலத்தை பொறுத்து எனக்கோ, மற்ற வாதிகளுக்கோ எவ்வித உரிமையும், பாத்தியமோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. 01.06.2000ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், மற்ற வாதிகளும் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு தற்போது அந்த நிலத்தில் உரிமை இல்லை என பிரச்சனை செய்கிறோம் என்றும், அவர் பிரச்சனை செய்வதாக பொய்யாக கூறுகிறோம் என்றால் சரியல்ல.

5. வழக்குரையில் உள்ள சொத்துவிவரம் தவறானது என்றால் சரியல்ல. நான் எத்தனை ஏக்கருக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் எனது கணவர் கிரையம் பெற்ற 6 ஏக்கர் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா வழக்கு மூலம் பொய்யானது என்றால் சரியல்ல. பட்டா செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோர இந்நீதிமன்றத்தில் எனக்கு வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியின் பதிலுரைக்கு

நான் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிரமான வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதியின் பதிலுரையையும், 01.06.2000ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தையும் மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. 01.06.2000ம் தேதியிட்ட கிரைய ஆவணம் உண்மையானது என்பதால் தான் அதை மறுத்துக் கூறவில்லை என்றால் சரியல்ல. 1986ம் தேதிக்கு பின்னிட்ட வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்திருந்தால் 2ம் பிரதிவாதியின் கிரையம் பற்றி தெரிந்திருக்கும் என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் உரிமையாளராக இருந்திருந்தால் விளம்புகை பரிகாரம் கேட்டிருப்பேன் என்றும், அவ்வாறு கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தூய கரங்களுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/-R.தமிழரசி**

**Principal District Munsif,**
**Kulithalai.**